[1981 பிப்ரவரி 6

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்கள் சமயம், சட்டம், சமூகம் ஆகிய அத்தனையையும் உள்ளடக்கியதாக இருப்பதால், அப் புத்தகங்களைப் படிக்கின்றவர்கள் தமிழகத்தின் எல்லா கலைச் செல்வங்களையும் அரசியல், சமுதாய அமைப்புக்களை யும் தெரிந்து கொள்கின்ற நிலை இருக்கின்றது. இந்த நாட்டு மக்களும், உலக மக்களும் அந்தப் புத்தகங்களின் மூலம் இவை அத்தனையையும் தெரிந்து கொள்ள வசதியாக இருக் கின்றது. ஆகவே, அந்தப் புத்தகங்களை மலிவு விலையில் கிடைக்கச் செய்வது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்களைப் படித்து அவருடைய பல்லாயிரக் கணக்கான கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில்தான் 1967-ஆம் ஆண்டிலே இருந்து தமிழகத்தில் அவருடைய பெயராலே அரசு நடந்து கொண்டிருக்கின்றது. மேலும் அவருடைய நூல்களை வெளியிடுகின்ற பொறுப்பை இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், எதிர்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் கூட ஏற்றுக் கொண்டு செய்ய முடியும். ஆனால் அரசே அதைச் செய்ய வேண்டுமென்றால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

சிவகிரியில் நூலகத்திற்கான இடம்.

*வினா எண் 166—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் நூலகம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி அனுபவித்து வருவது அரசுக் குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1981 பிப்ரவரி 6]

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர் முன்னாள் ஆளும் கட்சியைச் சேர்ந்த அவைத் தலைவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. கேள்விதான் கேட்க வேண்டும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, ஈரோடு மாவட்டத்தின் துணை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ஆம் நாளன்று பார்வை யிட்டிருக்கிறார்கள். அங்கே ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் அதிலே ஒரு கட்டிடத்தையே கட்டி இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நூலகங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டிடங்களிலேயே நடத்தப்படுகின்றன. ஆகவே அரசாங்கம் சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டங்கள் ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர்களே, நூலகத் துறையினுடைய நிதியாதாரங்களைப் பொறுத்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம்.

கோவை சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி.

*வினா எண் 167—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரம், முதல் வார்டு சித்தாபுதூர் மேல் நிலைப் பள்ளியில் மாணவிகள் எண்ணிக்கை சுமார் 800 ஆகி விட்டதால் பிரித்து பெண்கள் பள்ளி தனியாக ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

(இ) கோவை நகராட்சி அதற்கனுமதி கோரியுள்ளது ஏற்கப்பட்டுவிட்டதா ?